அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 332, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

332—

புதிய அங்கன்வாடி மையம்

***42080—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், ஆழ்வானேரி ஊராட்சி, புதுக்குறிச்சியில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஒன்றியம், ஆழ்வானேரி ஊராட்சியிலுள்ள புதுக்குறிச்சி கிராமத்தின் மக்கள் அனைவரும் அருகிலுள்ள ஆழ்வானேரியில் இயங்கிவரும் முதன்மை அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குழந்தைகள் வருகை அதிகமுள்ள இடங்களில் தேவைக்கேற்ப அங்கன்வாடி மையங்களைத் துவக்கிட வேண்டும் என்று ஆணையிட்டதன் அடிப்படையில், அங்கன்வாடி மையங்கள் சீரமைப்பின்கீழ், புதுக்குறிச்சியில் புதிய அங்கன்வாடி மையம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 செப்டம்பர் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 333, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

333—

கலைக் கல்லூரி

***35973—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாட்டிலேயே தமிழகத்தில்தான் 726 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அந்த வகையில் 76 அரசுக் கல்லூரிகள் தமிழ்நாடு அளவில் செயல்பட்டு வருகின்றன.

விருதுநகர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 19 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த மாவட்டத்தை உள்ளடக்கிய சிவகாசியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், சாத்தூர் மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில் அரசு உறுப்புக் கல்லூரிகளையும் வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, அந்த மாவட்டத்தினுடைய உயர் கல்வி தேவையைப் பூர்த்தி செய்கிறவகையில், அங்கே கல்லூரிகள் நிரம்ப இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு கல்லூரி வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அங்கே உயர் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்கிறவகையில் கல்லூரிகள்